**ආයතනයේ නම - විදුලිබල හා බලශක්ති අමාත්‍යාංශය**
**(බලශක්ති අංශය)**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

**நிறுவனத்தின் பெயர்**
**மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு (வலுசக்தி பிரிவு)**

கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களை சமர்ப்பித்தல் மற்றும் 119 (4) ஆம் இலக்க நிலையியல் கட்டளைகளுக்கிணங்க அரச கணக்குகள் குழுவினால் சமர்ப்பிப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்தல

**Name of the Institution**
**Ministry of Power and Energy (Energy Division)**

Submission of observation of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of standing order No. 119(4)

.

**பாராளுமன்ற வெளியீடுகள் தொடர் எண் 182**
**பொதுக் கணக்குக் குழுவின் முதல் அறிக்கை**
**2022.03.22 ஆம் திகதி முதல் 2022.07.05 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள்**

**மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு**
**விசாரணைத் திகதி - 2022 மே 05 ஆம் திகதி**

| இல. | குழுவில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் | எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் தற்போதைய நிலை |
|---|---|---|
| 01 | பணியாளர்கள்<br>2020 ஆம் ஆண்டின் இறுதியில், அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 90 ஆகவும், உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 72 ஆகவும் இருந்தது. தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் அதிகளவில் காணப்படுவதால், தொழில்நுட்ப அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு அமைச்சு தவறியுள்ளதாக குழுவில் தெரியவந்துள்ளது. | மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் வலுசக்தி பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 93 ஆகவும், 2013.01.13 ஆம் திகதி அன்று நிரந்தர ஊழியர்கள் 75 ஆகவும் காணப்பட்டது. வெற்றிடங்களின் எண்ணிக்கை 18 ஆக இருந்த போது, தொழில்நுட்ப தரங்களில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை 02 ஆக காணப்பட்டது. அவையாவன, பிரதான பொறியாளர் மற்றும் தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பதவி நிலைகள் ஆகும். தற்போது, தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளதுடன் தற்போது பிரதான பொறியாளர் பதவிக்கான வெற்றிடம் மட்டுமே வெற்றிடமாக உள்ளது. இலங்கை பொறியியலாளர் சேவையில் இருந்து இவ் பதவிக்கு தகுதியான உத்தியோகத்தர் ஒருவரை விடுவிக்குமாறு MPRD/ADM/2/5/6(IV) ஆம் இலக்கமிடப்பட்ட 2022.12.06 ஆம் திகதியிடப்பட்ட எனது கடிதத்தின் மூலம் பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், இக் கடிதத்தில் அமைச்சில் நிலவும் தொழில்நுட்பமற்ற (non-technical) வெற்றிடங்களுக்கும் ஊழியர்களை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.<br><br>சேவைக்கான தேவைகளின் அடிப்படையில் பொது நிர்வாக அமைச்சினால் காலத்திற்கு காலம் உத்தியோகத்தர்கள் மாற்றீடு இன்றி இடமாற்றப்படுவதால் தற்போது ஏனைய பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. |
| 02 | சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயமாக்கல் தொடர்பான தற்போதைய நிலைகள் | நிர்மாணித்தல், செயற்படுத்துதல் மற்றும் பரிமாற்றுதல் மாதிரியின் கீழ், யூரோ 6 தரநிலையில் நாளொன்றுக்கு 100,000 பரல் எரிபொருளை சுத்திகரிப்பு திறன் கொண்ட வகையில், சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை புதிய |

| | | |
|---|---|---|
| | | சுத்திகரிப்பு நிலையத் திட்டத்துடன் சேர்த்து அபிவிருத்தி செய்து அதனை விரிவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது.<br><br>இதற்கிணங்க, அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலைப் பெற்றதன் பின்னர், "Ms. KBC Advance Technologies Pvt Ltd, Singapore" நிறுவனத்தின் ஊடாக சாத்தியவளக் கற்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் இதன் அறிக்கை 2022 ஜனவரியில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.<br><br>இவ் அறிக்கை பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன;<br><br>1. நாளொன்றுக்கு 100,000 பரல் கொள்ளளவு கொண்ட புதிய சுத்திகரிப்பு நிலையத்தை சப்புகஸ்கந்தை பிரதேசத்தில் நிர்மாணிப்பது தொடர்பான சாத்தியவளக் கற்கைகள் பற்றிய விரிவான அறிக்கை.<br><br>2. திருத்தப்படாத முன்மொழிவுகளுக்கு ஆவணங்களை கோருதல் மற்றும் சர்வதேச கேள்வி மனு கோரல் மூலம் முதலீட்டாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான பொருத்தமான மாதிரி ஒப்பந்தம்.<br><br>இந்த அறிக்கைகள் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் மற்றும் திறைசேரியின் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், பொருத்தமான முதலீட்டாளரைத் தெரிவு செய்வதற்கான முன்மொழிவுகளை கோருதல் தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், புதிதாக நிலம் கையகப்படுத்தாத அரசு கொள்கையின்படி, செயற்படுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| 03 | புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.<br><br>அதற்கான நடவடிக்கைகள் மற்றும் அதற்கான கால அவகாசம் அடங்கிய அறிக்கையை குழுவிடம் சமர்ப்பப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. | அரசாங்கக் கொள்கை வரையறைகளுக்கிணங்க, சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு அபிவிருத்தி மற்றும் விரிவாக்கத் திட்டத்தை (SORDER) செயற்படுத்தப்படுவதற்கான கால வரையறைகள் சமா்ப்பிக்கப்பட்டுள்ளது. புதிய நிலத்தைக் கையகப்படுத்துவதன் மூலம் சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தைத் விரிவாக்கம் செய்வதும் அதனை செயற்படுத்துவதே ஆரம்ப யோசனையாக இருந்த போதிலும், உள்ளூர் மக்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளுக்கு மதிப்பளித்து தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயமாக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. |

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><th>காலம்</th><th>செயற்பாடுகள்</th><th></th></tr>
<tr><td>01</td><td>முதலீட்டாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான முன்மொழிவுகளை கோருவதற்கான ஆவணங்களை வழங்குதல்</td><td>20</td></tr>
<tr><td>02</td><td>முன்மொழிவுகளின் ஆய்வுகள் மற்றும் முதலீட்டாளரைத் தேர்ந்தெடுத்தல்</td><td>46</td></tr>
<tr><td>03</td><td>திட்டத்திற்கான சுற்றாடல் இணக்கம் சான்றிதழ் மற்றும் ஏனைய இணக்க அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளுதல்</td><td>24</td></tr>
<tr><td>04</td><td>பொறியாளர் பெறுகை மற்றும் நிர்மாணப் பணிகள்</td><td>156</td></tr>
<tr><td>05</td><td>நவீனமயப்படுத்தப்பட்ட சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள்</td><td>24</td></tr>
<tr><td></td><td>திட்டத்திற்கான மொத்தக் காலம்</td><td>250 (05 வருடங்கள்)</td></tr>
<tr><td colspan="3">குறிப்பு: மேற்குறிப்பிட்ட விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டதன் பின்னர், திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் காலத்திற்கான அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதல் பெற்றுக்கொள்ளப்பட்டவுடன் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும்.</td></tr>
</table>
</td></tr>
<tr><td>04</td><td>பழமைவாய்ந்த குழாய் முறைமையை மறுசீரமைப்பது தொடர்பான தற்போதைய நிலை</td><td>2019 ஆம் ஆண்டில் பழமைவாய்ந்த குழாய் முறைமையை மறுசீரமைப்பதற்கான கேள்வி மனுவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட போதிலும், இதற்கு அதிகளவான பணம் செலவிட வேண்டியிருந்தது. இதனால், இவ் குழாய் மறுசீரமைப்பு பபணிகள் இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கிணங்க, 2019 ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவை வரை செல்லும் 12 அங்குல விட்டம் கொண்ட குழாய் திருத்தப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளது. மேலும், 2021 ஆம் ஆண்டில் 14 அங்குல விட்டம் கொண்ட குழாயை பழுதுபாரக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போது வரை இதன் பழுதுபார்க்கும் பணிகள் 70% பூத்தியடைந்துள்ளன. மேலும் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக குழாய்தொகுதியின் மிகுதி திருத்தப்பணிகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகஈ வழங்குனர்கள் வெளியில் இருந்து</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | பெற்றுக்கொள்ளும் (outsourced) மூலப்பொருட்கள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதால் ஒப்பந்தத்தின் கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கிணங்க, மிகுதி மறுசீரமைப்பு பபணிகள் அனுமதிக்கப்பட்ட புதிய கட்டணத்துடன் முன்னெடுக்கப்பட்டது.<br><br>மேலும், கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவை வரை தற்போதுள்ள குழாய் பாதையில் 18 அல்லது 14 அங்குல விட்டமுள்ள புதிய குழாயை அமைப்பதற்கான தேவை உள்ளது. இதற்காக இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம், கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவை வரை கள (root)ஆய்வை ஆரம்பித்துள்ளதுள்ளது. இவ் பணிகள் பூர்த்தியடைந்ததும், புதிய குழாய் அமைக்கும் பணிகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| 05 | மன்னார் கடற்படுக்கையில் எரிபொருள் ஆய்வு செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்றங்கள் | இயற்கை வாயு கொள்கை இல்லாத காரணத்தால், 2017 ஆம் ஆண்டு இயற்கை வாயு தொடர்பான ஆய்வு அபிவிருத்திக்கு பொருத்தமான முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கு இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை தவறியமையால், இயற்கை வாயுவிற்கான தேசிய கொள்கையை (NPNG) தயாரிப்பதற்கான ஆரம்ப கட்ட முயற்சிகளை எடுத்துள்ளது. இதற்கிணங்க, 2020 ஒக்ரோபர் 17 ஆம் திகதி இயற்கை வாயுவிற்கான தேசிய கொள்கை (NPNG) தாபிக்கப்பட்டது.<br><br>2019 ஆம் ஆண்டு நடைபெற்ற சிறியளவிலான கேள்வி மனுச்சுற்றில் போட்டி அடிப்படையிலான கேள்வி மனுதாராரை அடையாளம் காண்பதற்கு தவறியுள்ளதுடன், மன்னார் கடற்படுக்கையில் உள்ள இயற்கை வாயு ஆய்வு மற்றும் அபிவிருத்திகளையும் சுருக்கமாக விபரிக்க முடியாமல் போய்விட்டது.<br><br>2018 ஆம் ஆண்டு முதல், Schlumberger நிறுவனத்துடன் இணைந்த நிறுவனங்கள், இயற்கை வாயுப் படிமங்களை அடையாளம் காணும் வகையில் மன்னார் கடற்படுக்கையில் வாயுப் படிமங்களை அடையாளம் காணும் வகையிலான கற்கைகளை முன்னேடுப்பதற்கு ஏதுவாக, பல-வாடிக்கையாளர் (multi-client) அடிப்படையில் புவியீர்ப்பு (seismic) தரவுகளை பெற்றுக்கொள்ளுதல், தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தது. |

| | | |
|---|---|---|
| | | 2021 செப்ரெம்பர் முதல் 2022 மே வரையிலான காலப்பகுதியில், மானார் கடற்படுகையில் வாயு கண்டுபிடிப்பை விரைவுபடுத்துவதற்கான மூலோபாய சந்தர்ப்பங்களை அடையாளம் காண்பதற்கானதொரு சுருக்கமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.<br><br>எவ்வாறாயினும், இத் தொழிற்துறையின் மீளாய்வு மதிப்பீடுகளின் படி, பாரியளவில் ஆய்வுத் துண்டங்களை ஒதுக்குவதன் மூலம் முதலீட்டாளர்களிடமிருந்து அதற்கான விருப்பங்களை பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதுடன், அனுமதிப்பத்திர முறைகள் ஊடாக பாரம்பரிய பொருட்களை விநியோகித்தல் முறைகளும் மன்னார் கடற்படுக்கையில் முதலீட்டாளர்களை பாரியளவில் கவருவதற்கு தவறியுள்ளது.<br><br>எனவே, நவீன தொழிற்துறை போக்குகளுக்கு இணங்க, இலங்கையின் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையானது, ஆயிரக்கணக்கான சதுர கிலோமீற்றர் பரப்பளவிற்குப் பதிலாக 25 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட பகுதியை 15 × 15 ஒரே அளவு கொண்ட சிறிய பகுதிகளாக் குறைப்பதற்கானதொரு மூலோபாய தீர்மானத்தை எடுத்தது. மன்னார், காவிரி மற்றும் இலங்கைப் கடற்படுகைகளை உள்ளடக்கியதாக 921 சிறிய நிலப்பரப்புகளை உள்ளடக்கிய புதிய கடலுக்கு அப்பாலுள்ள துண்ட வரைபடம் தயாரிக்கப்பட்டது. மேலும் இது 2022 யூலை 22 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானியில் பிரசுரிக்கட்டுள்ளது. இது முதலீட்டாளர்களுக்கு அவர்களின் ஆய்வுத் திறன்களுக்கமையவும் மற்றும் அவர்களின் விருப்பத்திற்கமையவும் சிறிய பகுதிகளில் அவர்களின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு இது சிறந்த நெகிழ்வுத்தன்மையை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.<br><br>கூட்டு கற்கை உடன்படிக்கை மூலம் குறுகிய கால ஆய்வுத் திட்டங்கள் ஊடாக மன்னார் கடற்படுக்கை உட்பட மேற்கூறிய அனைத்து துண்டங்களையும் வழங்குவதற்கானதொரு மூலோபாய கொள்கை தீர்மானம் எடுக்கப்படடுள்ளது.<br><br>தற்போது, 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் (கூட்டு கற்கை உடன்படிக்கை) ஒழுங்குமுறையில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளின் அடிப்படையில் தகுதிவாய்ந்த முதலீட்டாளர்களிடமிருந்து முன்மொழிவுகளை கோருவதற்கான ஆவணங்களைத் தயாரிப்பதற்கும் மற்றும் மதிப்பீடு செய்வதற்குமான |

| | | |
|---|---|---|
| | | நடவடிக்கை நடைபெற்று வருகின்றன.<br><br>எவ்வாறாயினும், ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக, இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை கடந்த இரண்டு வருடங்களில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் எதிர்பாரக்கப்பட்ட முன்னேற்றத்தை அடையவில்லை.<br><br>முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2022 ஆகஸ்ட் 25 ஆம் திகதி அன்று இலங்கையின் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையில் 33 நிரந்தர ஊழியர்களை நியமிப்பதற்கான ஒப்புதலை வழங்கியது, இதன் பின்னர் 2023 ஜனவரி 31 ஆம் திகதி ஆட்சேர்ப்பு திட்டத்திற்கும் ஒப்புதலை வழங்கியுள்ளது. மேலும், அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்படி மேற்கொள்ளப்படும் அவசர மற்றும் அத்தியாவசிய ஆட்சேர்ப்புகள் பற்றிய தகவல்களை அமைச்சரவை அமைச்சர்களால் நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பிரதமரின் செயலாளர் 2023.01.17 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டதால், அத் தகவல்களைத் தயாரிக்கும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. |
| 07 | எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து மீளப்பெற்றுக்கொள்ளப்படாத வாடகை | இந்த வரி விதிப்பு தொடர்பாக முகவர்கள் மற்றும் அலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கிடையே இடையே பேச்சுவார்த்தை நடாத்தி நியாயமான நடைமுறைகளை பின்பற்றுமாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தலுக்கு இணங்க, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரின் தலைமையில் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நாடத்தப்பட்டன. இதற்கிணங்க, முகவர்களிடமிருந்து மாதாந்த வாடகையை பெற்றுக்கொள்வதற்கு பதிலாக, 2023.01.01 ஆம் திகதியில் இருந்து செயற்படும் வகையில், முகவர்களுக்கான தரகுக் கட்டணத்தை 2.5% மாக குறைத்தன் பின்னர், CODO எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு செலுத்த வேண்டிய 2.75% விலைக்கழிவை வழங்குவதற்கு இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். மேலும், 2014 ஆம் ஆண்டு முதல் 2022.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான வருடாந்த வாடகையை செலுத்துவது தொடர்பாக, அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிப்பதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் தொடர்பான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

**மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு**
**விசாரணைத் திகதி - 2022 யூன் 22 ஆம் திகதி**

| இல. | குழுவில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் | எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் தற்போதைய நிலை |
|---|---|---|
| 02 | இலங்கையை போட்டித்தன்மை மிக்க எரிபொருள் மையமாக மாற்றுதல் | 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட சர்வதேச மேல்நிலை செய்தி தொடர்புகள் (Global Upstream News Source) மற்றும் Schlumberger பல-வாடிக்கையாளர் சர்வதேச சந்தைப்படுத்தல்கள் பிரச்சாரத்தின் மூலம், கடலுக்கு அப்பாலுள்ள 25% நிலப்பரப்பை உள்ளடக்கியதான ஆய்வு நிலத்தை ஆராய்வதற்கு எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து மேலும் ஒப்பந்தங்களை பெற்றுக்கொள்வது சாத்தியமாகியுள்ளது. Schlumberger மற்றும் Bell Geospace நிறுவனங்களின் தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் குழுக்கள், பல வாடிக்கையாளர் ஒப்பந்ததாரர்களாக இருப்பதால், அவர்களின் சர்வதேச சந்தைப்படுத்தல் வலைப்பின்னல் மூலம் தயாரிக்கப்பட்ட இவ் தரவுகளை சர்வதேச ரீதியாக சந்தைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர். மேலும் அவர்களின் சர்வதேச வலைப்பின்னல் மூலம் அடையாளம் காணப்பட்ட பல முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டுள்ளன.<br><br>இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையானது, மூன்று கடற்படுக்கைகளிலும் புதிய எரிபொருள் மற்றும் வாயு படிமங்களை கண்டறிவதற்காக புதிய தரவுகளுடன் தற்போதுள்ள கடற்படுக்கை மாதிரிகளை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது. இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை, தொழில்நுட்ப குழு மற்றும் பல- வாடிக்கையாளர் ஒப்பந்ததாரர்களுடன் இணைந்து, SEAPEX, EAGE போன்ற பல சர்வதேச மாநாடுகளில் தரவு பகுப்பாய்வு மற்றும் கடற்படுக்கை மாதிரி ஆய்வுகளுடன் இலங்கையின் எரிபொருள் திறன்களின் முடிவுகளை பௌதீக ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் வழங்கியுள்ளது.<br><br>இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையின் புவியியலாளர்கள் மற்றும் Schlumberger தொழில்நுட்பக் குழுவினால் கூட்டாக முன்வைக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப ஆய்வறிக்கையை அடுத்து, SEAPEX ஆய்வு உச்சி மாநாட்டில் (SEC 2023) முன்வைக்க ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. அத்துடன், இவ் உச்சி மாநாடானது ஆசிய பசிபிக் வலையத்தின் மேல்நிலை தொழிற்துறை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளமை விசேட அம்சமாகும். இது உலகின் முன்னணி எரிபொருள் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | வாயு பௌதீக புவியியலாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும ˙ஏனைய பிரதான பங்குதாரர்களை ஈர்க்கும் வகையிலான முக்கியத்துவம் வாயந்த வருடாநத தொழில்நுட்ப உச்சிமாநாடு என்பதால், இலங்கை எரிபொருள் மற்றும் வாயுவின் ஆய்வு மற்றும் உற்பத்தியை சர்வதேச ரீதியாக மேம்படுத்துவதற்கு சாத்தியமான வழிமுறைகளை முன்வைப்பதற்கு இதுவொரு சிறந்த தளமாக அமைந்துள்ளது. |
| 04 | இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்கள் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2022 ஆகஸ்ட் 25 ஆம் திகதி அன்று இலங்கையின் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையில் 33 நிரந்தர ஊழியர்களை நியமிப்பதற்கான ஒப்புதலை வழங்கியது, இதன் பின்னர் 2023 ஜனவரி 31 ஆம் திகதி ஆட்சேர்ப்பு திட்டத்திற்கும் ஒப்புதலை வழங்கியுள்ளது. மேலும், அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்படி மேற்கொள்ளப்படும் அவசர மற்றும் அத்தியாவசிய ஆட்சேர்ப்புகள் பற்றிய தகவல்களை அமைச்சரவை அமைச்சர்களால் நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பிரதமரின் செயலாளர் 2023.01.17 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டதால், அத் தகவல்களைத் தயாரிக்கும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. |
| 06 | புதிய துறைமுக வலுசக்தி உடன்படிக்கை | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின்படி, அமெரிக்காவின் New Fortress Energy நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பான அனைத்து செயற்பாடுகளும் அவ் அமைச்சினால் மேற்கொள்ளப்படடுள்ளன. இதற்கிணங்க,இலங்கை அரசிற்கும் New Fortress Energy நிறுவனத்திற்கும் இடையில் 2021.07.07 ஆம் திகதி கட்டமைப்பு உடன்படிக்கையும் 2021.09.17 ஆம் திகதி பங்கு கொள்வனவு மற்றும் விற்பனை உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது.<br><br>எனவே, இது தொடர்பாக குழுவால் சுட்டிக்காட்டப்பட்டதன் படி, ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்தும் மற்றும் ஒப்பந்தத்தில் உள்ள நன்மைகள் மற்றும் தீமைகள் தொடர்பாகவும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிடமிருந்து அறிக்கையினை பெற்றுக்கொள்வது மிகவும் பொருத்தமானது என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எமது அமைச்சு உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு அவ் அமைச்சின் செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது |

| | | |
|---|---|---|
| 07 | வாயு பயன்பாட்டு பெருந்திட்ட செயற்பாடுகளுக்கான குழு | நாட்டில் நிலவும் நிலையற்ற பொருளாதார தன்மை காரணமாக, வாயுவைப் பயன்படுத்த எதிர்பார்க்கப்படும் பிரதான தொழிற்துறைகளான, கைத்தொழிற்துறை மற்றும் போக்குவரத்து போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள முயற்சியாளர்கள் நீண்டகாலத்திற்கு தங்கள் தொழில்நுட்ப நடைமுறைகளை பயன்படுத்துவது தொடர்பாக தீர்மானங்களை எடுப்பதில் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். எனவே, மேற்குறிப்பிட்ட நடைமுறை பிரச்சினைகளை தீர்ப்பதில் உள்ள சிரமங்கள் காரணமாக, நாட்டின் பொருளாதாரம் நிலையான தன்மையை அடையும் வரை, வாயு பயன்பாட்டு பெருந்திட்டத்தை தயாரிப்பதற்கான நடைமுறைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| 08 | வாயு அகழ்வாராய்ச்சிக்காக முதலீட்டாளர்களுடன் உடன்படிக்கையில் ஈடுபடுதல் | தற்போது வருமான மாதிரி உட்பட 2022-2030 காலப்பகுதிக்கான திருத்தப்பட்ட தூர நோக்கு வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான முன்னோக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 09 | பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து வாடகையை பெற்றுக்கொள்வதில் உள்ள குறைபாடுகள் | இந்த வரி விதிப்பு தொடர்பாக முகவர்கள் மற்றும் அலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கிடையே இடையே பேச்சுவார்த்தை நடாத்தி நியாயமான நடைமுறைகளை பின்பற்றுமாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தலுக்கு இணங்க, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரின் தலைமையில் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நாடத்தப்பட்டன. இதற்கிணங்க, முகவர்களிடமிருந்து மாதாந்த வாடகையை பெற்றுக்கொள்வதற்கு பதிலாக, 2023.01.01 ஆம் திகதியில் இருந்து செயற்படும் வகையில், முகவர்களுக்கான தரகுக் கட்டணத்தை 2.5% மாக குறைத்தன் பின்னர், CODO எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு செலுத்த வேண்டிய 2.75% விலைக்கழிவை வழங்குவதற்கு இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். மேலும், 2014 ஆம் ஆண்டு முதல் 2022.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான வருடாந்த வாடகையை செலுத்துவது தொடர்பாக, அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிப்பதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் தொடர்பான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| 10 | எரிபொருள் விற்பனைக்காக கொடுக்கப்படும் தரகுக் கொடுப்பனவு காரணமாக ஏற்பட்ட இழப்பு. | முகவர்களுக்கு செலுத்த வேண்டிய தரகுக் கட்டணத்தை அதிகபட்சம் மற்றும் குறைந்தபட்ச தொகையின் கீழ் செலுத்த வேண்டும் என்ற 2019.07.30 ஆம் திகதியிடப்பட்ட 08/1231 ஆம் இலக்கமிடப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் இருந்து இடைக்காலத் தடை உத்தரவைப் பெற்றுள்ளனர். இவ் |

| | | |
|---|---|---|
| | | வழக்கு 2023 பெப்ரவரி 13 ஆம் திகதி மீளவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.<br><br>மேலும், தரகுக் கட்டணம் தொடர்பாக, 2022.12.28 ஆம் திகதயிடப்பட்ட் 05/1272ஆம் இலக்கமிடப்பட்ட பணிப்பாளர் சபையின் தீர்மானம் தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இதற்கான முன்மொழிவுகளுடன் அமைச்சரவைப் விஞ்ஞாபனத்தை சமர்ப்பிப்பது சாலச்சிறந்ததாகும். |

ஒப்பம்/.
**எம் பி டி யு கே மாபா பத்திரன**
செயலாளர்
மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு